KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: **10.63300/kijts10sp02.2026.31**

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

மரம்: ஒரு சமூகப் பார்வை

Tree: A Social Perspective

முனைவர் ச.முருகன் சுடலை[1,*]

[1] முதல்வர், ஐன்ஸ்டீன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீதபற்பநல்லூர், திருநெல்வேலி – 627 012, தமிழ்நாடு, இந்தியா.

***Corresponding author:** முனைவர் ச.முருகன் சுடலை, smsudalai@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 15 October 2026
Accepted: 20 October 2026
Published: 3 November 2026

Article ID
KIJTS-2026-0005

Peer review
Double-blind peer review

Keywords
Tree
Palmyra
Neem
Gooseberry
Sangam literature
Ethics literature
Siddha medicine
Gunapadam
Social perspective
Natural lifestyle.

ABSTRACT

This article establishes that three trees—Palmyra (Panae), Neem (Vembu), and Gooseberry (Nelli)—function simultaneously in Tamil life as medicine, as metaphors for moral righteousness, and as symbols of social belief. Evidence from classical literature such as Thirukkural, Naladiyar, Purananuru, Agananuru, and Kurunthogai, as well as Siddha medicine texts including Gunapadam, serves as the foundation for this study.

In literature, the Palmyra stands as an exemplar of charity and gratitude, the Neem of disease eradication, martial heritage, and divine belief, and the Gooseberry of benevolence and longevity. The conclusion of this research is that the ancient premise, "Without trees, there are no humans," underscores the necessity of returning to a natural lifestyle even in today's disease-laden environment.

How to cite this article: முனைவர் ச.முருகன் சுடலை (2026). மரம்: ஒரு சமூகப் பார்வை. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 404–418. https://doi.org/10.63300/kijts10sp02.2026.31
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

பனை, வேம்பு, நெல்லி ஆகிய மூன்று மரங்களும் தமிழர் வாழ்வில் மருந்தாகவும், அறநெறிக்கான உவமையாகவும், சமூக நம்பிக்கையின் குறியீடாகவும் ஒருசேர இயங்குகின்றன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது. திருக்குறள், நாலடியார்,

புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை ஆகிய இலக்கியச் சான்றுகளும், குணபாடம் உள்ளிட்ட சித்த மருத்துவ நூல்களும் இதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

பனை ஈகைக்கும் நன்றியுணர்வுக்கும், வேம்பு நோய்தீர்ப்புக்கும் போர் மரபுக்கும் தெய்வ நம்பிக்கைக்கும், நெல்லி கொடைக்கும் நீடித்த வாழ்வுக்கும் இலக்கியத்தில் சான்றாக நிற்கின்றன. "மரமின்றேல் மனிதரில்லை" என்ற பண்டைய நிலைப்பாடு, இன்றைய நோய்ச் சூழலிலும் இயற்கை வாழ்வியலுக்குத் திரும்ப வேண்டியதன் தேவையை உணர்த்துகிறது என்பது இவ்வாய்வின் முடிபு.

திறவுச் சொற்கள்: மரம், பனை, வேம்பு, நெல்லி, சங்க இலக்கியம், அற இலக்கியம், சித்த மருத்துவம், குணபாடம், சமூகப் பார்வை, இயற்கை வாழ்வியல்.

1. முன்னுரை

நமது உடம்பில் உள்ள கழிவுத்தேக்கங்களே நோய்க்கான அடிப்படைக் காரணியாகும். நோய் உருவாகும் இடத்திலிருந்து கிருமிகள் இயல்பாகப் பிறக்கின்றன. இத்தகைய நோய்களை நீக்கவும், வருமுன் காக்கவும் மருத்துவம் இன்றியமையாதது. மனநலனை மேம்படுத்த வேண்டுமானால் உடல்நலத்தையும் மேம்படுத்த வேண்டும்.

மரம் மனிதனைக் காக்கும் கவசமாகவும், அறிவைப் போதிக்கும் ஆசானாகவும் தமிழர் வாழ்வில் நிற்கிறது. 'மரம்' நம்முடைய வாழ்வில் ஓர் ஒருங்கிணைந்த அமைப்பாகும்: அது உணவு, மருந்து, உறைவிடம், வழிபாடு, வாழ்க்கைநெறி என பல நிலைகளில் மனிதனோடு பிணைந்துள்ளது. புலவர்கள் மரத்தை உவமையாகவும் உள்ளுறையாகவும் ஆக்கி அறத்தைப் போதித்தனர்; சித்தர்கள் அதன் உறுப்புகளில் மருந்தைக் கண்டனர்.

நமது உயிரின் ஆற்றலைப் பெருக்க மரம் மனிதருக்கு நடுவே எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் சமூக நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதற்காக, தமிழ் நிலத்தில் பரவலாகக் காணப்படும், இலக்கியத்தில் அடிக்கடி இடம்பெறும் பனை, வேம்பு, நெல்லி ஆகிய மூன்று மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

2. ஆய்வின் நோக்கமும் அணுகுமுறையும்

2.1 ஆய்வுச் சிக்கல்

நவீன மருத்துவம் வளர்ந்த இன்றைய சூழலில், மரங்கள் குறித்த நம் முன்னோரின் அறிவும் அவற்றின் சமூகப் பொருளும் மறக்கப்பட்டு வருகின்றன. இலக்கியமும் சித்த மருத்துவமும் தனித்தனியே ஆராயப்படுகின்றன; இவை இரண்டும் ஒரே மரத்தைப் பற்றி என்ன கூறுகின்றன என்ற ஒருங்கிணைந்த பார்வை குறைவாகவே உள்ளது.

2.2 ஆய்வின் நோக்கங்கள்

1. 'மரம்' என்ற சொல்லின் வேரும் அதன் மறுபெயர்களும் உணர்த்தும் பொருளை விளக்குதல்.

2. பனை, வேம்பு, நெல்லி ஆகியவற்றின் மருத்துவப் பயன்களை சித்த மருத்துவ நூல்களின் வழி தொகுத்தளித்தல்.
3. இம்மரங்களை அற இலக்கியமும் சங்க இலக்கியமும் எவ்வாறு உவமையாகவும் குறியீடாகவும் கையாண்டன என ஆராய்தல்.
4. மரங்கள் சார்ந்த நம்பிக்கைகளும் வழக்கங்களும் இன்றைய சமூகத்தில் எவ்வாறு தொடர்கின்றன என்பதை சமூக நோக்கில் மதிப்பிடுதல்.

2.3 ஆய்வு முறை

இவ்வாய்வு **விளக்கமுறை** மற்றும் **பகுப்பாய்வு முறை** ஆகியவற்றைப் பின்பற்றுகிறது. இலக்கியப் பாடல்கள் மூலத்துடன் எடுத்தாளப்பட்டு, அவற்றின் பொருள் சித்த மருத்துவக் குறிப்புகளோடும் இன்றைய சமூக வழக்கங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன.

- **முதன்மைச் சான்றுகள்:** திருக்குறள், நாலடியார், புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை.
- **துணைமைச் சான்றுகள்:** க.ச. முருகேசமுதலியாரின் ‘குணபாடம்’, சித்த மருத்துவ நூல்கள், இலக்கிய உரைநூல்கள், தேவநேயப் பாவாணரின் சொல்லாராய்ச்சிக் கருத்துக்கள், நாளிதழ் கட்டுரைகள்.

2.4 ஆய்வு எல்லை

மரங்களைப் பற்றிய இலக்கியச் சான்றுகள் எண்ணிலடங்காதவை. இவ்வாய்வு பனை, வேம்பு, நெல்லி ஆகிய மூன்று மரங்களோடும், மேற்குறிப்பிட்ட இலக்கிய, மருத்துவ நூல்களோடும் தன்னை வரம்புச் செய்து கொள்கிறது. மருத்துவக் குறிப்புகள் நூல்கள் கூறும் செய்திகளாகவே தரப்படுகின்றன; அவை மருத்துவரின் ஆலோசனைக்கு மாற்றாகா.

3. மரம் – சொல்லாராய்ச்சி

மரம் என்பது பூமியில் தோன்றிய தாவரங்களுள் மிகப் பெரியது. ‘மரம்’ என்ற சொல் ‘மற்று’ (வலிமை, உறுதி) என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் எனத் தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகிறார். மரத்தின் உறுப்புகள் பிற தாவரங்களின் உறுப்புகளை விட மிக வலிமையானவை என்பது இக்கருத்தை வலுப்படுத்துகிறது.

மரம் தன் வாழ்நாள் முழுவதும் பூ, காய், கனி, இழை, தண்டு, வேர், நிழல், காற்று, மருந்து என யாருக்காவது ஏதாவது பயனைத் தந்துகொண்டே இருப்பதால் அதனைத் ‘தரு’ என்றும் கூறுவர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் நன்மையைப் பொழிந்துகொண்டே இருப்பதால் ‘பொழிதல்’ என்ற பெயரும் உண்டு என்பர். மரத்தின் கிளைகளைக் குறிக்கும் சொல் ‘கோடு’ என்று வழங்கப்படுகிறது. இச்சொற்களே, மரத்தைத் தமிழர் ‘கொடை’யின் வடிவமாகக் கண்டனர் என்பதற்குச் சான்றாகும்.

4. பனை – பண்பும் பயனும்

4.1 பனையும் பண்பும்

பனையின் வேர் முதல் தலை வரை அனைத்தும் மனிதனுக்குப் பயன்தரும். இரும்பு கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அதன் விலை மற்ற பொருட்களை விட அதிகமாக இருந்ததால், புகைவண்டிப் பாதை, வீட்டுக் கட்டிடம் போன்றவற்றுக்கு மரங்களே முதன்மைப் பொருளாக விளங்கின. அதனால்தான் பண்டைய காலம் 'மரமின்றேல் மனிதரில்லை' என்ற நிலைப்பாட்டில் இருந்தது.

மரங்கள் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு பிராணவாயுவைக் கொடுக்கின்றன; மழைப்பொழிவுக்கு உதவி பூமிக்குக் குளிர்ச்சியும் நாட்டிற்குப் பொருளாதார வளமும் தருகின்றன. இவற்றுள் பனையின் வேர், ஓலை, தண்டு, பூ, பழம், கிழங்கு, தவன், நுங்கு, பதநீர் என அனைத்தும் மனித உடலுக்கு வலுவூட்டும் ஆற்றல் கொண்டவை. தன்னை அர்ப்பணித்துப் பிறருக்கு வாழ்நாள் முழுவதும் பயன்தருவதில் மற்ற மரங்களை விடப் பனையே முன்னோடியாகத் திகழ்கிறது.

4.2 பனையின் மருத்துவமும் வாழ்வியல் பயன்களும்

அட்டவணை 1: பனையின் உறுப்புகளும் பயன்களும்

வ.எண்	பனையின் உறுப்பு	பயன்
1	கிழங்கு	மந்தத்தைப் போக்கி உடம்பைச் சுறுசுறுப்பாக்கும்; இடித்து மாவாக்கி உண்டால் உடல் பருமனாகும்
2	பனம்பழம்	எலும்புச்சூடு நீங்கிக் குளிர்ச்சியும் அழகும் உண்டாகும்
3	வேர்	வேகவைத்து உண்டால் உடல்பிணி நீங்கும்
4	தண்டு	வீடு கட்டப் பயன்படுகிறது
5	கற்கண்டு	மேகசுரம், அம்மையின் வெப்பம், நீர்ச்சுருக்கு, தாகம் ஆகியவற்றை நீக்கும்
6	வெல்லம்	வாதம், பித்தம், சன்னி நோய் நீங்கும்
7	ஓலை	பாய், விசிறி, பெட்டிகள், அழகுப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது
8	மட்டை	நார் எடுத்துத் துடைப்பம் செய்யப் பயன்படுகிறது

வ.எண்	பனையின் உறுப்பு	பயன்
9	பூ	குருத்தினைச் சீவிப் பதநீர் எடுக்கப் பயன்படுகிறது

இவ்வட்டவணை, பனையின் ஒவ்வொரு உறுப்பும் உணவாகவோ, மருந்தாகவோ, வீட்டுப் பயன்பாட்டுப் பொருளாகவோ மனிதனுக்குத் தொண்டாற்றுவதைக் காட்டுகிறது. பனையைப் போன்ற பன்முகப் பயனை வேறெந்த மரமும் தருவதில்லை என்றே சொல்லலாம்.

4.3 பனையின் வேறு பெயர்கள்

சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் எனப் பல்வேறு இலக்கியங்களும் பனையின் பெயர்களையும் பயன்களையும் விவரிக்கின்றன. புலவர்கள் தம் தேவைக்கேற்பப் பனைக்குப் பல பெயர்களை இட்டு மகிழ்ந்தனர். குணபாடம் கூறும் பெயர்கள்: **தாலம், கரும்புறம், ஏடகம், காமம், தருவிராகன், தாளி**.

> *"இது இந்தியா முழுவதும் தானாக ஓங்கி வளரும் மரம். இலைகள், மட்டை, பூ, வேர் இவைகள் மருந்துகளுக்குப் பயன்படுகின்றன." [1]*

4.4 பனையும் மாண்பும்: திருக்குறள் சான்றுகள்

பனையின் மாண்பைப் போற்றி வளர்த்ததில் இலக்கியங்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. வள்ளுவர் 'தினை' – 'பனை' என்ற அளவுச் சொற்களை எதிர்வைத்து, மனித ஒழுக்கத்தின் மூன்று நிலைகளை விளக்குகிறார்.

நன்றியுணர்வு. ஒருவர் தினையளவு சிறிய உதவி செய்தாலும், அதன் பயனை அறிந்தவர் அதைப் பனையளவு பெரிதாகக் கருதுவர்:

> *"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
>
> *கொள்வர் பயன்தெரி வார்" [2]*

பழிநாணம். தன்மானமும் ஒழுக்கமும் கொண்டவர் தம்மிடம் தினையளவு குற்றம் நேர்ந்தாலும் அதைப் பனையளவாகக் கருதி வருந்துவர்:

> *"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
>
> *கொள்வர் பழிநாணு வார்" [3]*

அச்சம், இழிசொல், குற்றவுணர்வு, பழி, நாணம் ஆகியவற்றுக்கு அஞ்சும் சான்றோர், பிறருக்குத் தீமை விளைவிக்கும் செயல்களில் ஒருபோதும் ஈடுபடமாட்டார். நவீன யுகத்திலுள்ள அனைவரும் முன்னோர் வழி நின்று, நம் சந்ததியினருக்கு அறத்தைப் பயிற்றுவிக்கும் கலன்களாக வாழவேண்டும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது.

அன்பு. காதல் பனையளவு நிறைந்து வரும்போது தினையளவும் ஊடல் கூடாது என்கிறார் வள்ளுவர்:

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்

காமம் நிறைய வரின்" [4]

அன்பின் வெளிப்பாடு ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்படுவதிலேயே உள்ளது. இங்கு அன்பு பனையளவாகவும், சினம் தினையளவாகவும் நிறுத்தப்படுகின்றன; 'சினங்கொள்ளும் குடி சிறக்காது' என்ற மரபுமொழி இதற்குத் தகுந்த சான்றாகும். சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளையும் தனிமனித ஆளுமையையும் அளக்கும் அளவுகோலாகப் பனை பயன்படுவதில் அதன் மகத்துவம் வெளிப்படுகிறது.

4.5 ஆண் பனையும் பெண் பனையும்: நாலடியார் காட்டும் ஈகைநெறி

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் மரத்தை வைத்து மரபைச் சொல்வதில் கைதேர்ந்தவர்கள். எதுகை, மோனை, உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி எனப் பல உத்திகளால் தம் கருத்தைப் புலப்படுத்தினர். வாழும்போதே பிறருக்குப் பயனுள்ள வாழ்க்கை வாழவேண்டும் என்பதை நாலடியார் பனையை வைத்துச் சொல்கிறது:

"நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க

படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்;

குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்

இடுகாட்டுள் ஏற்றைப் பனை" [5]

இப்பாடல் ஈகைக்குப் பெண்பனையையும் (படுபனை), கஞ்சத்தனத்திற்கு ஆண்பனையையும் (ஏற்றைப் பனை) உவமையாகக் காட்டுகிறது. ஊரின் நடுவே மேடை சூழ நிற்கும் பெண்பனையின் நுங்கு, கிழங்கு, பழம், பதநீர் அனைத்தும் ஊர் மக்களுக்குப் பயன்படுவதுபோல, ஈகையாளரின் செல்வமும் பலருக்கும் பயன்படும். செல்வச் செழிப்பில் இருந்தும் பிறருக்குக் கொடுக்காமல் தாமும் உண்ணாத கஞ்சர்கள், சுடுகாட்டில் நிற்கும் காய்க்காத ஆண்பனைக்கு ஒப்பாவர்.

மனிதனாகப் பிறந்தவன் உழைத்துண்ணும் பழக்கத்துடன், பிறருக்குக் கொடுத்துத் தானும் உண்டு, தன் குடிப்பெருமையைக் காக்க வேண்டும். 'பிறர் நலனே தன்னலம்' என்ற கொள்கையுடன் செயல்பட வேண்டும் என்பதைப் பனையின் வழி அறிய முடிகிறது.

5. வேம்பு – மருந்தும் மரபும்

5.1 வேம்பு கூறும் தத்துவம்

நவீன யுகத்தில் ஒவ்வொரு தனிமனிதரும் சமுதாயத்தில் முன்னேற, வாழ்க்கை என்னும் பெரும்போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். பணம், பொருள் சேர்க்கும் போட்டியில் 'அறம் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு விடை தெரியாமலேயே போய்விட்டது. பொய், புரட்டு, ஏமாற்றம், பகை என வீண் வெறுப்பு பெருகி, ஒருவரின்

சிந்தனை, சொல், செயல் அனைத்தும் சுயநல நோக்கில் நகரத் தொடங்கிவிட்டன. இதற்குக் காரணம் சூழல் மட்டுமல்ல; நம்முடைய வாழ்க்கைநெறிகளும்தான்.

மனிதன் இல்லற வாழ்க்கையில் மட்டுமின்றிப் பொது வாழ்க்கையிலும் 'வேம்பு' போல இருக்க வேண்டும்; ஏனெனில் வேம்பின் அடி முதல் தலை வரை ஒவ்வொன்றும் மருத்துவப் பண்புடையது. பண்டைய மக்கள் ஊர்த் திருவிழாக்கள், சமயச் சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் வேம்பைப் பயன்படுத்தினர்; அம்மை நோய்க்கும் அதனைப் பெரும் நிவாரணியாகக் கருதினர். நமது நாடு அறிவியலில் முன்னேறிக்கொண்டிருக்கும் இந்நாளில், சித்தர்கள் அந்தக் காலத்திலேயே வேம்பின் மகத்துவத்தை அறிந்திருந்தனர் என்பது அவர்களது அறிவின் ஆழத்தைக் காட்டுகிறது. அதனால்தான் சித்தர்கள் இன்றும் தெய்வமாகப் போற்றப்படுகின்றனர்:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்" [6]

மருத்துவம் வளராத காலத்தில் சித்தர்கள் காட்டிய வாழ்க்கைநெறியும் மருத்துவநெறிகளுமே மக்களுக்கு உயிர்நாடியாக விளங்கின. மனித உடல் நிலையாமைத் தன்மையுடையது; ஒருவர் இருந்தாலும் இறந்தாலும் பிறருக்கு மருந்துபோல் பயன்பட வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு வேம்பு.

5.2 வேம்பின் வேறு பெயர்களும் வகைகளும்

குணபாடம் வேம்புக்கு அரிட்டம், துத்தை, நிம்பம், பாரிபத்திரம், பிசுமந்தம், வாதாரி எனப் பல பெயர்களைக் கூறுகிறது:

> *"இஃது ஒருவித மகிழ்ச்சியைத் தரும் மரம். இந்தியாவிற்கே உரியதாகத் தெரிகிறது. ஆயினும், பர்மாவிலும் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் வடமேற்கு நாடுகளில் வறட்சியான பாகங்களில் இது செழிப்பாக வளரும்." [7]*

வேம்பில் **கருவேம்பு, சர்க்கரை வேம்பு, மலை வேம்பு, நிலவேம்பு** என நான்கு வகைகள் உண்டு. இவற்றுள் நிலவேம்பிற்கு மட்டுமே சிரட்குச்சி, காண்டகம், கிராதம், கிரியாத்து, கிராகதி, நாட்டு நிலவேம்பு, அனாரியதித்தம், காண்டம், கோகணம் என ஒன்பது வகைகள் கூறப்படுகின்றன [8]. ஒரே மரத்திற்கு இத்தனை பெயர்களும் உட்பிரிவுகளும் இருப்பது, தமிழர் அதனை எவ்வளவு நுண்ணியதாக அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

5.3 வேம்பின் மருத்துவ மகத்துவமும் சமூக நம்பிக்கையும்

வேப்ப மரத்தின் பூ, காய், கனி, வேர், நெய், மரப்பட்டை, கட்டை, ஈர்க்கு, கள், பிசின், இலை, விதை, பிண்ணாக்கு என அனைத்துப் பகுதிகளும் மருத்துவப் பயன் கொண்டவை. கிருமிநாசினியாகவும், புண்களுக்கு மருந்தாகவும், புழுக்கொல்லியாகவும் வேம்பு பயன்படுகிறது.

பில்லி, சூனியம், அம்மை நோய், காத்து கருப்பு போன்றவற்றை விரட்டும் சக்தி அம்மனுக்கு உண்டு என மக்கள் நம்பினர். இந்நம்பிக்கையின் வெளிப்பாடாக, வேப்பமரம் பெரும்பாலான அம்மன் கோவில்களில் நட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. மக்கள் வாழும் இடங்களிலும் சாலையின் இருபுறங்களிலும் வேம்பு முதன்மை மரமாகப் பாதுகாக்கப்படுகிறது. எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் மருத்துவம் என்றால் அது வேம்புதான்.

வேம்பின் இத்தனித்தன்மையை ஒரு மருத்துவ நூல் இவ்வாறு பதிவு செய்கிறது:

> *"வேப்பமரத்தைத் தினசரி எழுந்தவுடன் அதன் அருகே நின்று கண் குளிரப் பார்த்து அதன் காற்றைச் சுவாசித்து வந்தால் கண் சம்பந்தமான எந்த நோயும் வராது. மனமும் சாந்தமடைவதுடன், புத்தி சுவாதீனம் இல்லாதவர்களும் நல்ல குணமடைவார்கள். ஆகவேதான் இன்றும் பல ஊர்களில் அம்மன் கோவில்களிலும், காளிகோயில்களிலும் வேம்பு இருப்பதால் புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் அங்கு தங்கியிருந்து சுகம் பெறுவதை நாம் அறிகிறோம்." [9]*

வேம்பு பழந்தமிழரின் தெய்வீக நம்பிக்கைக்கு மட்டுமல்லாது மனிதகுலத்திற்கே பயனுள்ள பொக்கிஷமாகவும் திகழ்கிறது. குணபாடம் வேப்பிலையின் தன்மையைப் பாடலாகவே கூறுகிறது:

> *"கிருமிருட்ட மாந்தங் கெடுவிடஞ்சு ரங்கள்*
>
> *பொருமியம சூரிகையின் புண்கள் – ஒருமிக்க*
>
> *நிம்பத் திலையிருக்க நீடுலகில் நீங்காமல்*
>
> *கம்பத் திலையிருக்கக் காண்" [10]*

வயிற்றுப்புழு, மாந்தம், நச்சுச்சுரம், அம்மைப் புண், சொறி, சிரங்கு ஆகியவற்றை வேப்பிலை போக்கும் என்றும், வேம்பு புத்தியைத் தெளிவாக்கும், வீரியத்தை உண்டாக்கும், பித்தநீரை வெளியேற்றும் என்றும் இந்நூல் கூறுகிறது. மருந்து செய்முறையையும் அது தருகிறது:

> *"வேப்பமரத்தின் துளிர், முதிர்ச்சியான இலை ஆகிய இரண்டையும் இடித்து, அப்பொடியின் அளவிற்கு அரைப் பங்கு ஓமமும் உப்பும் சேர்த்துப் பொடித்து, நல்ல நாளில் புசிக்கத் தொடங்கின், அதனால் கண்ணிலிருக்கும் படலமறைப்பு, காமாலை, மாலைக்கண், புழுவெட்டு முதலிய நோய்கள் அகலும்." [11]*

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பது பழமொழி; 'உடலை வருத்தும் நோய் வந்திட உள்ளத்தையே நொறுக்கும்' என்பது இக்கட்டுரையாசிரியரின் மொழி. வருமுன் காப்பதே சிறந்த வாழ்வுக்கான வழி; பசித்தபின் உணவும் தேவைக்கேற்ற நடைப்பயிற்சியும் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

5.4 வேம்பும் அறநெறியும்: நாலடியார்

தமிழ் இலக்கியங்கள் நமது குணம், கல்வி, தகுதி ஆகியவற்றுக்கு வேம்பினை உவமையாகக் காட்டுகின்றன. நாலடியார் இன்னார்ச் சேர்க்கை குறித்துப் பேசும்போது,

"வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்

தீஞ்சுவை யாதுந் திரியாதாம் – ஆங்கே

இனந்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை

மனந்தீதாம் பக்கம் அரிது" [12]

என்கிறது. கசப்பான வேப்பிலைக்குள் வைத்துப் பழுக்க வைத்தாலும் வாழைப்பழம் தன் இனிய சுவையை சிறிதும் இழக்காது. அதுபோல, சுற்றியுள்ள இனம் தீயதாயினும் நல்லியல்புடையாரின் நட்பு தீயதாக மாறுவதில்லை. இங்கு வேம்பின் கசப்பு தீய சூழலுக்கும், வாழையின் இனிமை நல்ல இயல்புக்கும் உவமையாகின்றன. நல்ல நட்பு ஆம்பல், கரும்பு போன்றது; தீய குணம் வேம்பின் கசப்பு போன்றது என்பது சமண முனிவர்களின் அறவுரையாகும். எளிய வேம்பினை வைத்துக்கொண்டு புலவர்கள் எவ்வளவு பெரிய வாழ்க்கைத் தத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது வியப்புக்குரியது.

5.5 வேம்பும் காதலும்: குறுந்தொகை

சங்க இலக்கியம் வேம்பைப் பாண்டியரின் அடையாளப் பூவாகவும், விழுப்புண் ஆற்றும் மருந்தாகவும், காதல் மாற்றத்தை உணர்த்தும் குறியீடாகவும் சித்தரிக்கிறது. மருதத் திணைப் பாடலான குறுந்தொகை 196,

"வேம்பின் பைங்காய் என் தோழி தரினே

தேம்பூங் கட்டி என்றனிர் இனியே

பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்

தைஇத் திங்கள் தண்ணிய தரினும்

வெய்ய உவர்க்கும் என்றனிர்

ஐய அற்றால் அன்பின் பாலே" [13]

என்று தலைவனின் அன்பு மாற்றத்தைப் பேசுகிறது. காதலின் தொடக்கத்தில் தலைவி தந்த கசப்பான வேப்பங்காயைக் கூடத் தேன்கட்டி என்ற தலைவன், இன்று பாரியின் பறம்புமலைச் சுனையின் குளிர்ந்த நீரைக் கூட 'வெப்பமாகவும் உவர்ப்பாகவும் உள்ளது' என்கிறான் என்று தோழி சுட்டிக்காட்டுகிறாள். பொருளின் சுவை மாறவில்லை; அன்புதான் மாறியது என்பதை வேம்பின் கசப்பு உவமைநயத்துடன் உணர்த்துகிறது.

பண்டைய இலக்கியங்கள் காதலின் தன்மையை இவ்வாறு உள்ளுணர்வோடு பேசுகின்றன. தற்காலக் காதலோ பொருளாதாரத்தையும் ஆடம்பரத்தையும் எதிர்நோக்கியே வளர்கிறது; வாழ்க்கையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போல மாறிவருவதைப் பார்க்க முடிகிறது.

5.6 வேம்பு – ஓர் போர்க் குறியீடு

பாண்டிய மன்னர்களின் அடையாளப் பூ வேப்பம்பூ ஆகும். படைவீரர்கள் போருக்குச் செல்லும்போது வேப்பம்பூ மாலையைச் சூடிச் செல்வது வழக்கம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடும் புறநானூறு 76 இதற்குச் சான்று:

“ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்

புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை

இன்றி னூங்கோ கேளலந் திரளரை

மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்” [14]

மன்றத்தில் நிற்கும் திரண்ட அடியையுடைய வேம்பின் ஒளிரும் தளிரை மன்னன் சூடியதை இப்பாடல் கூறுகிறது. போரில் காயம்பட்ட வீரர்களின் புண்கள் சீழ்பிடிக்காமல் இருக்கவும் கிருமித்தொற்று ஏற்படாமல் இருக்கவும் வேப்பிலை முதன்மை மருந்தாகப் பயன்பட்டது. நிலவேம்பு நீர்வழி மருந்தாகப் பயன்படுவதை இன்றைய மரபு மருத்துவர் இவ்வாறு விளக்குகிறார்:

“நீர் வடிவ மருந்து திசுக்களால் எளிதாக உறிஞ்சப்பட்டு, விரைவாகப் பலன் தரும் என்பது ஆராய்ந்து அறியப்பட்ட உண்மை. அந்த வகையில், நீர் வடிவில் வழங்கப்படும் நிலவேம்புக் குடிநீர், விரைவில் காய்ச்சலின் தீவிரத்தைக் குறைக்கும் வல்லமை கொண்டது.” [15]

நவீன அறிவியலும் தொழில்நுட்பமும் வளராத காலத்தில் எழுத்தாணிகொண்டு ஓலைச்சுவடிகளில் சித்தர்கள் எழுதிய மருத்துவக் குறிப்புகளை இன்றும் உலகம் கடைப்பிடிக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவர்களது ‘அறிவுப் புரட்சி’தான். டெங்கு, சிக்கன்குனியா, பறவைக் காய்ச்சல் போன்ற புதிய நோய்கள் வரிசையாக வரும் இன்றைய சூழலில், மரபு மருத்துவமும் கவனம் பெறுகிறது.

விழுப்புண்பட்ட வீரனைக் காக்கும் மரபைப் புறநானூறு 281 காட்டுகிறது:

“தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ

வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்க...” [16]

வீரனின் மனைவாயிலில் இரவம், வேம்பு ஆகியவற்றின் தழைகளைச் செருகி, இசைக்கருவிகள் ஒலிக்க, வெண்சிறுகடுகு (ஐயவி) தூவி, நறுமுகை காட்டிப் புண்பட்ட வீரனைக் காத்தனர் என்பதை இப்பாடல் காட்டுகிறது. பேய்களிடமிருந்தும்

கிருமிகளிடமிருந்தும் வீரனையும் வீட்டிலுள்ளவர்களையும் காக்கும் தொலைநோக்குப் பார்வை இதில் உள்ளது.

சங்ககாலத்தில் தொடங்கிய இப்பழக்கம் இன்றும் தொடர்கிறது. கோவில் திருவிழா, வளையணி விழா போன்ற விழாக்களின் முடிவில் ஊர்தோறும் வேப்பிலை கட்டும் வழக்கம், முன்னோரின் அறிவியல் திறனும் மருத்துவமுறையும் நம்பிக்கையாக மாறித் தொடர்வதைக் காட்டுகிறது.

6. நெல்லி – ஓர் இயற்கை வாழ்வியல்

தமிழ் இலக்கியங்களில் நெல்லி மரம் பற்றிய பாடல்களும் குறிப்புகளும் சங்ககாலம் முதல் தற்காலம் வரை தொடர்ந்து இடம்பெறுகின்றன. கோடைக்காலத்தில் வரும் நோய்களைத் தடுத்து, கோட்டைபோல் நின்று நோய்எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும் ஆற்றல் நெல்லிக்கு உண்டு. தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை உண்ணும்போது உடலுக்குத் தேவையான 'வைட்டமின் சி' கிடைக்கிறது.

நெல்லிக்காய் உண்பவர்களுக்கு 'ஆயுள் கெட்டி' என்ற முன்னோரின் அறிவுத் துணுக்குகளே இன்று அறிவியல் உண்மைகளாக மாறியுள்ளன. நமது இலக்கியங்கள் நெல்லியின் வழி வாழ்வியலின் மகத்துவத்தை எவ்வாறு எடுத்தியம்புகின்றன என்பதை இனி காணலாம்.

6.1 அதியமான் ஈந்த அரிய மருந்து

வறட்சியான நிலங்களில் விளையும் நெல்லியை, உடல்பிணி தீர்க்கும் மருந்தாக மட்டுமல்லாமல் கொடைக்குச் சிறந்த உதாரணமாகவும் இலக்கியங்கள் காட்டுகின்றன. நெல்லிக்காய் என்றாலே எல்லோருக்கும் நினைவுக்கு வருவது ஔவையும் அதியமானும்தான்:

"...சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

ஆதல் நின்னகத்து அடக்கிச்

சாதல் நீங்க எமக்கீத் தனையே" [17]

தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்டால் நீண்டகாலம் வாழலாம் என்று தெரிந்தும், தான் வாழ்வதைவிடத் தமிழும் ஔவையும் நீண்டகாலம் வாழவேண்டும் என்ற தொலைநோக்குடன் அதியமான் அதனை ஔவைக்கு ஈந்தான். கனியின் அருமையை அவளிடம் கூறாமல் மனதில் அடக்கிக்கொண்டு கொடுத்ததே இக்கொடையின் உயர்வு என்பதைப் பாடல் சுட்டுகிறது.

தன்னுயிரைப் பெரிதெனப் பாராது, தாய்மொழியையும் அதனைப் பாடும் புலவரையும் பெரிதெனப் போற்றிய அதியமானின் பெருந்தன்மை வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும். ஒருவன் தன்னைக் காக்கப் பிறரின் உயிரைக்கூடப் பகடைக்காயாக்கும் இக்காலத்தில், இத்தகைய சுயநலமில்லாத கொடை, தாய்மொழியை நாம் எந்த அளவு நேசிக்கிறோம் என்ற கேள்வியை எழுப்புகிறது.

6.2 இலக்கிய உவமைகளில் நெல்லி

அகநானூறு, வறண்ட பாலை நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் நெல்லிக்காய்களைப் பளிங்கு மணிகளுக்கு உவமிக்கிறது:

"பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி

மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப,

உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்,

மாய்த்த போல மழுகுநுனை தோற்றி" [18]

கதிரவன் காயும் மலைச்சரிவில், கரிய பாறைமீது சூதாடும் கவறைகள் சிதறிக் கிடப்பதுபோல நெல்லிக்காய்கள் உதிர்ந்து கிடக்கின்றன என்ற இவ்வுவமை, புலவரின் நுண்ணிய இயற்கைப் பார்வையைக் காட்டுகிறது. எதுகை, மோனை, உவமை, உருவகம் ஆகியவற்றால் பாடலின் சுவையைக் கூட்டி, தமிழ்ச் சமூகத்தில் தாக்கத்தையும் ஊக்கத்தையும் தரும் தொலைநோக்கில் புலவர்கள் பாடல்களை இயற்றினர்.

மலைப்பகுதியில் வாழும் விலங்குகளும் நெல்லிக்கனியை விரும்பி உண்ணும் செய்தியைக் குறுந்தொகை கூறுகிறது:

"புரி மட மரையான் கரு நரை நல் ஏறு

தீம் புளி நெல்லி மாந்தி அயலது..." [19]

நெல்லிக்கனி முதலில் துவர்க்கும், பின்னர் நீர் அருந்தினால் தித்திக்கும். அதுபோல, அறிவிற்பெரியோரும் ஞானிகளும் கூறும் அறிவுரைகள் தொடக்கத்தில் கசப்பாகத் தோன்றினாலும், பின்னர் வாழ்க்கைத் தத்துவமாகவும் சமூக நன்மையாகவும் அமைகின்றன என்பதை நெல்லி உணர்த்துகிறது.

7. ஆய்வுக் கண்டறிதல்கள்

மூன்று மரங்களும் மருத்துவம், அறம், சமூகம் என்ற மூன்று தளங்களிலும் ஒரே நேரத்தில் இயங்குகின்றன என்பதே இவ்வாய்வின் மையக் கண்டறிதல்.

அட்டவணை 2: மூன்று மரங்களின் ஒப்பீடு

மரம்	இலக்கியச் சான்றுகள்	மருத்துவப் பயன் (மூல நூல்கள் கூறுவது)	அற / சமூகக் குறியீடு
பனை	திருக்குறள் 104, 433, 1282; நாலடியார் 96	கிழங்கு, பழம், வேர், கற்கண்டு, வெல்லம் – உடல் வலிமை, குளிர்ச்சி	நன்றியுணர்வு, பழிநாணம், ஈகை (பெண்பனை) – கஞ்சத்தனம் (ஆண்பனை)

மரம்	இலக்கியச் சான்றுகள்	மருத்துவப் பயன் (மூல நூல்கள் கூறுவது)	அற / சமூகக் குறியீடு
வேம்பு	திருக்குறள் 50; நாலடியார் 244; குறுந்தொகை 196; புறநானூறு 76, 281	கிருமிநாசினி, புண் ஆற்றுதல், புழுக்கொல்லி; நிலவேம்புக் குடிநீர் – காய்ச்சல்	பாண்டியர் அடையாளப் பூ, வீரரைக் காக்கும் மரபு, அம்மன் வழிபாடு, காதல் மாற்றத்தின் உவமை
நெல்லி	புறநானூறு 91; அகநானூறு 5; குறுந்தொகை 317	நோய்எதிர்ப்புச் சக்தி, வைட்டமின் சி, ‘ஆயுள் கெட்டி’	சுயநலமற்ற கொடை, தாய்மொழிப் பற்று, அறிவுரையின் கசப்பு–இனிப்பு

1. ‘மரம்’, ‘தரு’, ‘பொழிதல்’, ‘கோடு’ என்ற சொற்களின் பொருள், மரத்தைத் தமிழர் வலிமையினும் கொடையினும் வடிவமாகக் கண்டனர் என்பதைக் காட்டுகிறது.
2. வள்ளுவர் ‘தினை – பனை’ என்ற அளவுச் சொற்களால் நன்றி, குற்றம், அன்பு என்ற மூன்று வாழ்வியல் நிலைகளை அளந்து காட்டுகிறார்; பனை அறத்தின் அளவுகோலாகிறது.
3. நாலடியார் பெண்பனை – ஆண்பனை என்ற இருமையால் ஈகையாளரையும் கஞ்சரையும் வேறுபடுத்தி, செல்வத்தின் சமூகப் பயனை வலியுறுத்துகிறது.
4. வேம்பு, சங்ககாலத்தில் விழுப்புண் காத்தலில் தொடங்கி, இன்று அம்மன் கோவில், திருவிழா, வீட்டுவாயில் வழக்கமாகத் தொடர்கிறது; மருத்துவ அறிவு சமய நம்பிக்கையாக மாறிப் பாதுகாக்கப்பட்டுள்ளது.
5. குறுந்தொகை 196, சுவை மாறாமல் அன்பு மாறுவதை வேம்பின் கசப்பால் உணர்த்தி, உளவியல் நுண்ணுணர்வைக் காட்டுகிறது.
6. அதியமான் – ஔவை நிகழ்வில் நெல்லி, உயிர்காக்கும் மருந்தாக மட்டுமல்லாமல் தமிழ்ச் சமூகத்தின் கொடைநெறிக்கும் மொழிப்பற்றுக்கும் குறியீடாகிறது.
7. குணபாடம் போன்ற சித்த மருத்துவ நூல்கள் தரும் செய்திகளும் இலக்கியச் செய்திகளும் ஒன்றையொன்று உறுதிப்படுத்துகின்றன; இவை இரண்டும் இணைந்த ஆய்வு மரபு அறிவை மீட்டெடுக்க உதவும்.

8. நிறைவுரை

இலக்கியங்களில் மரங்களைப் பற்றித் தேடுகையில் எண்ணிலடங்காப் பாடல்கள் காணக்கிடக்கின்றன; அவற்றுள் மரங்கள் கூறும் மருத்துவமும் வாழ்க்கைத் தத்துவமும் வியப்பை ஏற்படுத்துகின்றன. பழங்காலத்தில் மனிதன் இயற்கையை

உண்டு நோய்எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக்கொண்டான்; ஒவ்வொரு பொருளிலும் நோய்தீர்க்கும் மருத்துவத்தைக் கண்டறிந்தான். இன்றோ மருத்துவம் பெருமளவு வணிகமாக மாறிவிட்டது.

நம் முன்னோர் நமக்கு அருளிய கொடை 'இயற்கை' எனும் மருந்தாகும். உண்ணும் உணவிலிருந்து உறங்கும் பாய் வரை உடல்நலத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை அவர்கள் அறிவுறுத்தினர். உலகின் தலைசிறந்த மருந்து உணவே. அன்றாட வாழ்வில் உடல்நலத்தைப் பாதுகாக்க உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, உணவுமுறைக் கட்டுப்பாடு ஆகியவை அவசியம். நோயையும் அதன் வேரையும் ஆராய்ந்தே மருத்துவம் செய்ய வேண்டும் என்று வள்ளுவரும் கூறுகிறார்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்" [20]

பனை ஈகையையும், வேம்பு வருமுன் காத்தலையும், நெல்லி சுயநலமற்ற கொடையையும் நமக்குக் கற்பிக்கின்றன. மரத்தைக் காப்பது மனிதனைக் காப்பதே என்ற உணர்வுடன், நமது உயிருக்கான ஆற்றலை முறையாகப் பெற்று, உடலையும் மனதையும் நலமாகக் காப்போம்; நம்மை நோய்களிடமிருந்து மீட்போம்!

சான்றாதாரக் குறிப்புகள்

1. க.ச. முருகேசமுதலியார், *குணபாடம்*, பக். 653, இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை, சென்னை – 600 100.
2. திருக்குறள், அறத்துப்பால், செய்நன்றி அறிதல், குறள் 104; கவிஞர் ஏ. கோபாலகிருட்டிணன் (உரை), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608 001.
3. திருக்குறள், பொருட்பால், குற்றங்கடிதல், குறள் 433; மேற்படி நூல்.
4. திருக்குறள், இன்பத்துப்பால், புணர்ச்சி விதும்பல், குறள் 1282.
5. நாலடியார், பா. 96, *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்*, சென்னை – 14.
6. திருக்குறள், அறத்துப்பால், இல்வாழ்க்கை, குறள் 50.
7. க.ச. முருகேசமுதலியார், *குணபாடம் – முதல் பாகம்*, பக். 853.
8. மேற்படி நூல், பக். 579.
9. டாக்டர் மு.யு. சிதம்பர காங்கேயன், *உயிர் காக்கும் சித்த மருத்துவம்*, பக். 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 600 098.
10. க.ச. முருகேசமுதலியார், *குணபாடம்*, பக். 854.
11. மேற்படி நூல், பக். 855.
12. நாலடியார், பா. 244, *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்*, சென்னை – 14.
13. குறுந்தொகை, மருதம், பா. 196, பக். 262, *சங்க இலக்கியங்கள் – மூலமும் உரையும்*, வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை – 17.
14. புறநானூறு, பா. 76, திணை: வாகை.

15. டாக்டர் வி. விக்ரம்குமார், *மரபு மருத்துவம்*, பக். 143–144, தி இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை – 600 002.
16. புறநானூறு, பா. 281; ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, *புறநானூறு – மூலமும் உரையும்*, சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.
17. புறநானூறு, பா. 91; மேற்படி நூல்.
18. அகநானூறு, பா. 5, வரி 9–12, களிற்றியானை நிரை, பக். 10–11; புலியூர்க் கேசிகன், *அகநானூறு – மூலமும் உரையும்*.
19. குறுந்தொகை, குறிஞ்சி, பா. 317, வரி 1–2, பக். 426; *சங்க இலக்கியங்கள் – மூலமும் உரையும்*, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.
20. திருக்குறள், பொருட்பால், மருந்து, குறள் 948.

துணைநூற்பட்டியல்

References

அகநானூறு – மூலமும் உரையும், புலியூர்க் கேசிகன் (உரை).

சங்க இலக்கியங்கள் – மூலமும் உரையும் (குறுந்தொகை), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.

திருக்குறள், கவிஞர் ஏ. கோபாலகிருட்டிணன் (உரை), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608 001.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (நாலடியார்), சென்னை – 14.

புறநானூறு – மூலமும் உரையும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை), சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.

சிதம்பர காங்கேயன், மு.யு. உயிர் காக்கும் சித்த மருத்துவம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

முருகேசமுதலியார், க.ச. குணபாடம் – முதல் பாகம் (மூலிகை வகுப்பு). இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை, சென்னை.

விக்ரம்குமார், வி. மரபு மருத்துவம். தி இந்து தமிழ், சென்னை.